**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.11.2025**
**OS. No. 01/2015**
**வழக்கு சாட்சி PW.2–மாணிக்கம், த/பெ.கந்தப்ப கவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**3, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி லட்சுமி என்னுடைய மனைவி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதப்பட்ட தேதியில் நான் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேனா என்றால் இல்லை. நான் 30.06.2010ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதப்பட்டபோது என் மனைவிக்கு நான் தான் உதவி செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதப்பட்டதற்கு முன்பு நான் அதில் கண்ட சொத்தின் மூல ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை, அதற்கு முன்பே என்னிடம் அடமானம் வைத்திருந்தார்கள். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதுவதற்கு முன்பு அதில் கண்ட சொத்தின் வில்லங்க சான்றிதழை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) பிரதிவாதிகளுக்கும், நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கும் சுமார் 1கி.மீ தொலைவு இருக்கும். பிரதிவாதிகளின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி காவேரியின் தந்தை பெயர் பெருமாள் கவுண்டர் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டருக்கு செல்லப்பன், சின்னபையன், லட்சுமணன், 1ம் பிரதிவாதி காவேரி, பழனியப்பன் மற்றும் கிருஷ்ணன் ஆகிய 6மகன்கள் உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி பெருமாள் கவுண்டர் மற்றும் அவரது 6 பிள்ளைகள் 17.09.1976ம் தேதியில் அவர்களது குடும்ப சொத்தை பொறுத்து அவர்களுக்குள் பதிவு செய்த பாகபிரிவினை பத்திரம் மூலம் பாகபிரிவினை செய்து கொண்டனர் என்றால் பாகபிரிவினை ஏற்பட்டது, அதை பதிவு செய்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை.

3) வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதுவதற்கு முன்பு மேற்படி பாகபிரிவினை பத்திரத்தை பார்த்தேனா என்றால் பத்திரம் எழுதப்பட்டதா என்றே எனக்கு தெரியாது. நான் கிராம நிர்வாக அலுவலராக இருந்ததால் எனக்கு அனைத்து விவரமும் தெரியும் என்றும், 1ம் பிரதிவாதி காவேரி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதாலும், அ வருக்கு நிறைய கெட்ட பழக்கங்கள் இருப்பதாலும் அவரை ஏமாற்றி பொய்யாக வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தை என் மனைவி பெயருக்கு எழுதி வாங்கிவிட்டோம் என்றால் சரியல்ல. என் மனைவி வா.சா.1 ஆக குறுக்கு விசாரணையில் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வா.சா.1 இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து விவரங்களும் அவரது கணவரான எனக்கு தெரியும் என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான்.

4) என் மனைவி வாதி தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்பதற்கு அடங்கல் போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பிரதிவாதிகள் அதை வாங்க தடுக்கிறார்கள், அதனால் முதல் தகவல் அறிக்கை போன்ற வேறு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகள் தடுப்பதாக சொல்லும் மேற்படி விவரத்தை என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு என் மனைவி பெயரில் தற்போது வரை பட்டா இல்லை என்றால் சரிதான், பிரதிவாதிகள் அதை வழங்க தடுக்கிறார்கள். பட்டா வழங்குவதற்கு வட்டாட்சியருக்கு தான் அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிகள் தடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் ஆட்சேபனை தெரிவிப்பதால் வழங்கவில்லை.

5) தாவா சொத்து வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதுவதற்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி காவேரிக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி காவேரிக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்று தெரிய வந்தது என்றால் பட்டா படியும், அனுபவ படியும் பாத்தியம் என்று தெரியவந்தது. பூர்வீக சொத்தில் பாகம் வழங்கப்பட்டதால் பட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு

வழங்கப்பட்டு அவருக்கு பாத்தியம் ஏற்பட்டதா என்றால் இல்லை, அந்த சொத்து பூர்வீக சொத்தே இல்லை. அவ்வாறெனில் எதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது. **சாட்சி தற்போது தாவா சொத்து 1ம் பிரதிவாதி காவேரியின் அண்ணன் தம்பிகள் கிரையம் பெற்றதாகவும், அதை தான் 1ம் பிரதிவாதிக்கு பங்காக வழங்கப்பட்டு அவர் பெயரில் பட்டா ஏற்பட்டதாக தெரிவிக்கிறார்**. மேற்கண்ட கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1ம் பிரதிவாதி காவேரியின் அண்ணன் தம்பிகள் கிரையம் பெற்றதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் 1ம் பிரதிவாதி காவேரிக்கும் அவரது சகோதரர்களுக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களை அவர்கள் அனுபவித்து வந்த சமயத்தில் 17.09.1976ல் பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த பத்திரத்தில் E செட்டியூல் சொத்து தான் 1ம் பிரதிவாதி காவேரிக்கு வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த E செட்டியூல் சொத்தில் தாவா சொத்துக்களும் அடங்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட சொத்தானது பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் 1ம் பிரதிவாதிக்கும் அவரது 3 மகன்கள் மற்றும் 1 மகள் அனைவருக்கும் சரிசமமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை தவிர மற்ற பிரதிவாதிகளின் பாகத்தையும் ஏமாற்றி கிரையம் பெற்றது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

7) தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு அனுபவம் வேண்டி வேற்று நபர்கள் மீது ஏதேனும் வழக்கு தாக்கல் செய்து தனக்கு ஆதரவாக தீர்ப்பு பெற்றுள்ளாரா என்றால் இல்லை, அ.வ.எண்.247/2012 என்ற வழக்கில் தாவா சொத்தை என் மனைவிக்கு விற்றதாக 1ம் பிரதிவாதி சாட்சியம் அளித்துள்ளார். 1ம் பிரதிவாதி காவேரி பெயரில் வழங்கப்பட்டதாக

சொல்லும் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பட்டாவானது குடும்ப சொத்தில் பாகபிரிவினை ஏற்பட்டு அதன் அடிப்படையில் அவருக்கு பாகமாக வழங்கப்பட்ட சொத்து என்ற அடிப்படையிலும், குடும்ப கர்த்தா என்ற அடிப்படையிலும் கொடுக்கப்பட்ட பட்டா என்றால் சரியல்ல. பட்டா மட்டும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதால் அந்த சொத்து சட்டப்படி முழுமையாக அவருக்கு தான் பாத்தியப்பட்டது என்று எடுத்துக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது பிள்ளைகளுக்கும் சரிசமமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் மனைவி யாரை வழக்கறிஞராக வைத்துள்ளார் என்றால் வழக்கறிஞர் திரு. B.பாலமுருகனை வைத்துள்ளார். அதற்கும் நான் தான் உதவி செய்தேன் என்றால் சரிதான்.

8) வா.சா.ஆ.11 அடமான கடன் பத்திரத்தை 1ம் பிரதிவாதி காவேரி, அவரது மகன்கள் கோவிந்தசாமி, மைனர் பழனிசாமி ஆகியோர்கள் என் மனைவி லட்சுமிக்கு எழுதி கொடுத்தாக கண்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் மூத்த மகன் நடராஜனையோ அல்லது அவரது வாரிசுகளோ மேற்கண்ட ஆவணத்தில் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான், அவர்கள் 1ம் பிரதிவாதியுடன் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு மட்டும் முழுமையாக பாத்தியப்பட்ட நான் கூறும் நிலையில் அவரது பிள்ளைகளை ஏன் மேற்கண்ட ஆவணத்தில் தரப்பிரனர்களாக சேர்த்துள்ளோம் என்றால் அவர்கள் அனைவரும் சேர்ந்து தான் அடமானம் வைத்தார்கள், பின்னர் அவரது பிள்ளைகள் ஊரை விட்டு ஓடி விட்டதால், 1ம் பிரதிவாதி காவேரி கிரைய பத்திரம் தான் எழுதி கொடுத்தாக தெரிவித்தார். நான் சொல்வது எல்லாம் தவறு என்றும், சொத்தை ஏமாற்றுவதற்காக காவேரி மற்றும் என் மனைவி லட்சுமி இருவர் மட்டும் கிரையம் ஏற்படுத்திக்கொண்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 அடமான பத்திரத்தில் கோவிந்தசாமி கையொப்பம் செய்யவில்லை என்றும், நாங்கள் ஆள்மாறாட்டம் செய்து அந்த ஆவணத்தை தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல.

9) அ.வ.எண்.247/2012 என்ற வழக்கில் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை காவேரியின் இறந்த மகன் நடராஜனின் வாரிசுகள் காவேரி மீதும் மற்றவர்கள் மீதும் குடும்ப சொத்துக்கள் என்று சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கு அந்த வழக்கின் வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகி விட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி காவேரியை எளங்கள் பக்கம் வைத்துக்கொண்டு பொய்யான வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தை எழுதி கொண்டோம் என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு சட்டப்படி எந்த பரிகாரமும் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.247/2012 என்ற வழக்கில் கோவிந்தசாமி மற்றும் பழனிசாமி ஆகியோர் வழக்கறிஞர் நியமித்து வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறான சாட்சியம் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.